செய்தி வெளியீடு எண்: 260 நாள் : 03.06.2016

03.06.2016 (வெள்ளிக்கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில், தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் (புதிய கட்டிடம்) 6–வது தளத்தில் உள்ள பள்ளிக் கல்வித் துறையின் கூட்டரங்கில், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணையின்படி, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை ஆகிய துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் நலத் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் திருமதி **Dr.V. சரோஜா** அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திரு.பொ.சிவசங்கரன், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலர், சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, திரு.முகமது நசிமுதீன், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலர், மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, டாக்டர் திரு.க. மணிவாசன், இ.ஆ.ப., இயக்குநர் (மற்றும்) குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், திரு.R.லால்வீனா,இ.ஆ.ப., சமூகப் பாதுகாப்புத் துறை இயக்குநர், மற்றும் துறைகளின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9